(Thiru A. R. Damodaran in the chair.)

II.—ADJOURNMENT MOTION *RE* CANE CHARGE ON DEMONSTRATORS AT MADURAI.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட ஒத்திவைப்புப் பிரேரணையை இம்மன்றத்தில் கொண்டு வருகிறேன் :—

"நேற்று மதுரையில் கைது செய்யப்பட்ட காங்கிரஸ் பிரமுகர் திரு. ப. நெடுமாறன் அவர்களை இன்று மதுரை மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குக் கொண்டு வந்தபொழுது வேடிக்கை பார்க்கக் கோர்ட்டுக்கு வந்த பதினாயிரம் பொது மக்களை போலீசார் தடிகொண்டு தாக்கி 500 பேரை காயப்படுத்தியிருக்கிறார்கள். கடைசியாக வந்த செய்தியில் 50 பேர் நிலைமை மோசமாக இருப்பதாகவும், 15 பேர் பிழைப்பது அரிது என்றும் செய்தி வந்திருக்கிறது. ஆகையால் அது பற்றி விவாதிக்க இந்த சபையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ".

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மதுரையிலே நாகர்கோவில் தேர்தல் முடிந்ததை ஒட்டி காங்கிரஸ் தோழர்களிடத்திலும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களிலே ஒரு பகுதியினரிடத்திலும் கலவரச் சூழ்நிலை தொடர்ந்து இருந்து வந்தது. அப்படி இருந்த நேரத்திலே அந்தக் கலவரத்திலே ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி 27 பேருக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

அவர்களிலே சிறு பகுதி முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். சிறு பகுதியினர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். இப்படி அவர்கள்மீது வழக்குப் போடப்பட்டது. அவர்களுக்கு கோர்ட் சம்மன் அனுப்பட்டது. இப்படி சம்மன் அனுப்பட்டவர்கள் அனைவரும் அவற்றை ஏற்றுக் கொண்டு கோர்ட்டுக்குச் சென்றார்கள். ஆனால் இந்த குறிப்பிட்ட நெடுமாறன் என்பவர் மட்டும் அந்த சம்மனை வாங்க மறுத்துவிட்டார். மறுத்தது மன்னியில் தவறாகவும் பேசி வந்திருக்கிறார். சம்மனை வாங்க மறுத்ததால் அவருடைய வீட்டில் சம்மன் ஒட்டப்பட்டது. கோர்ட்டுக்குப் போக மறுத்தார்; மறுத்தது மாத்திரமல்லாமல் மதுரையிலே ஒரு கூட்டம் போட்டு, அதிலே 'சம்மன் அனுப்பினால் அதை மதிக்கமாட்டேன் : கோர்ட்டுக்குப் போக மாட்டேன்' என்று சட்டம் ஒழுங்குக்குப் புறம்பான முறையிலே அந்தக் கூட்டத்திலே பேசி இருக்கிறார். பேசியது மாத்திரமல்ல, போலீஸ் தலைமை அதிகாரியாகிய ஐ.ஜிக்கு 'தொப்பி எதற்கு, சட்டை எதற்கு', என்றெல்லாம் தரக்குறைவான அருவருக்கத்தக்க முறையிலே பேசி, 'கோர்ட்டுக்குச் செல்ல முடியாது, அப்படி கோர்ட்டுக்குச் செல்வதாக இருந்தால், பல்லாயிரக் கணக்கானவர்கள்

நாங்கள் செல்வோம், நீதிபதியைக் கேள்வி கேட்போம்' என்றெல்லாம் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சுக் குறிப்புகளெல்லாம் போலீசாரிடம் இருந்து அரசுக்கு வந்திருக்கிறது. இதற்கு இடையிலே சம்மனை மதித்து கோர்ட்டுக்கு வராத காரணத்தால் நீதிபதியின் உத்தரவின் பேரில் அந்த நெடுமாறன் கைது செய்யப்பட்டிருக்கிறார். கைது செய்யப்பட்டு கோர்ட்டுக்கு கொண்டு வரப்பட்டதும், 6-ம் தேதி வரையில் ரிமாண்டில் இருக்குமாறு நீதிபதி உத்திரவிட்டதின் பேரில், 6-ம் தேதி வரையில் ரிமாண்டில் இருக்குமாறு நீதிபதி இட்ட உத்திரவைத் தொடர்ந்து. அதை ஒட்டி அவரை போலீஸ் வானில் ஏற்றி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் இருந்து சென்ட்ரல் ஜெயிலுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பல்லாயிரக்கணக்கான பேர்கள் கூடியிருந்தால் அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் அவரை சென்ட்ரல் ஜெயிலுக்கு அழைத்துச் செல்கிற நேரத்தில் மதுரை பஸ் ஸ்டேண்ட் பக்கத்தில் 500 பேர்கள் போலீஸ் வானை வழி மறித்து ஜெயிலுக்கு அந்த நண்பரைக் கொண்டு போகாத அளவிற்குத் தடுத்திருக்கிறார்கள். இப்படித் தடுக்கப்பட்ட நேரத்திலே தான், போலீசார் மீது கல்லெறியப்பட்டிருக்கிறது. 7, 8 போலீசாருக்குக் காயம். இப்படிக் காயம் அடைந்த நேரத்திலே போலீசார் தடியடி அல்ல (cane charge) செய்திருக்கிறார்கள். பிரம்பால் அடித்திருக்கிறார்கள். பிரம்பால் அடித்துக் கூட்டத்தைக் கலைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக கலவரம் செய்தவர்களிலே ஏறத்தாழ 20, 30 பேருக்கு மேல் காயம் அடைந்திருக்கிறார்கள். போலீசாரில் 7, 8 பேருக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது. இன்று கிடைத்த தகவல்படி இப்படி நடந்திருக்கிறது. சட்டம், ஒழுங்கு, அமைதிக்கு பாதகம் ஏற்படுகிற காரியம் நடைபெற்றது. இப்பொழுது அமைதி நிலை நாட்டப்பட்டிருக்கிறது. போலீஸ் வானிலே ஏற்றி சென்ட்ரல் ஜெயிலுக்கு அழைத்துச் செல்கிற நேரத்திலே போலீஸ் வானை வழி மறித்து இப்படிச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதைப் பற்றி வேறு தகவல் இல்லை. எனவே தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு இது தகுந்த பிரச்னை அல்ல என்பது என்னுடைய கருத்து என்பதை அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

MR. VICE-CHAIRMAN : A motion to adjourn the business of the House to discuss a definite matter of urgent public importance must come strictly under the rules. The matter should involve more than the ordinary administration of law. Following the precedents in this regard, the incident mentioned in the notice does not involve more than the ordinary administration of law and order. Further the Member can raise this in the general discussion on the Budget for 1969-70. In view of this, I withhold consent to raise the matter.